# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2021/6 - 2017 මැයි මස 29 වැනි සඳුදා - 2017.05.29

*2021/6 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு மே மாதம் 29 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

### ஊவா மாகாண மாகாண சபை

**ஊவா மாகாணத்தின் மாகாண சபையின் 2017 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, மாகாண சபை ஊதியம் மற்றும் கொடுப்பனவுகளை செலுத்துவதற்கான (திருத்த) சட்டமூலம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ஊவா மாகாணத்தின், மாகாண சபையால் 2017.05.09 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டு, 2017.05.16 ஆந் திகதி ஊவா மாகாண கௌரவ ஆளுநர் அவர்களால் அனுமதிக்கப்பட்டுள்ள பூர்வாங்க நியதிச் சட்டத்தை அனைவரதும் கவனத்திற்காக இத்தால் வெளியிடுகின்றேன்.

ஆர். ஏ. எச். ஏ. சமரசிங்க,<br>
செயலாளர்,<br>
ஊவா மாகாணத்தின் மாகாண சபை.

ஊவா மாகாண சபைச் செயலாளர் அலுவலகம்,<br>
இராஜ வீதி,<br>
பதுளை.<br>
2017, மே 23.

ஊவா மாகாணத்தின் மாகாண சபையின் 2017 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, மாகாண சபை ஊதியம் மற்றும் கொடுப்பனவு செலுத்துவதற்கான (திருத்த) நியதிச் சட்டம்

இனி வருங்காலங்களில் பிரதான நியதிச் சட்டம் என அறிமுகப்படுத்தப்படும் "ஊவா மாகாண சபையின் 1990 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மாகாண சபை ஊதியம் மற்றும் கொடுப்பனவுகளை செலுத்துவதற்கான நியதிச் சட்டம்" என அறிமுகப்படுத்தப்பட்டிருந்த நியதிச் சட்டத்தின் பெயரை நீக்கி, அதற்கு பதிலாக "ஊவா மாகாண சபையின் 1990 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மாகாண சபைகள் ஊதியம் மற்றும் கொடுப்பனவுகளை செலுத்துவதற்கான நியதிச் சட்டம்" என திருத்தப்படும்.

சுருக்கப் பெயரும் நடைமுறை திகதியும்.

1. இந்நியதிச் சட்டத்தை ஊவா மாகாண மாகாண சபையின் 2017 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க மாகாண ஊதியம் மற்றும் கொடுப்பனவுகளை செலுத்துவதற்கான (திருத்த) நியதிச் சட்டமென அறிமுகப்படுத்துவதுடன், அதற்கென ஊவா மாகாண ஆளுநர் அவர்களுடைய அனுமதி கிடைத்த நாள் முதல் நடைமுறைக்கு வரும்.

தவிசாளர் மற்றும் பிரதி தவிசாளர் அவர்களுக்கு செலுத்த வேண்டிய ஊதியம் மற்றும் கொடுப்பனவுகள்

*2*. பிரதான நியதிச் சட்டத்தின் இரண்டாவது பிரிவின் (ஆ) ஆம் உப பிரிவு நீக்கப்பட்டு, அதற்கு பதிலாக கீழ்க் குறிப்பிடப்படும் பிரிவு உட்படுத்தப்படுவதன் மூலம் திருத்தப்படும்.

(ஆ) ஊவா மாகாண மாகாண சபையின் பிரதி தவிசாளர் அவர்களுக்கு, மத்திய அமைச்சின் பிரதி அமைச்சர் ஒருவருக்கு தற்பொழுது செலுத்தப்படும் மாதாந்த ஊதியம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளில் மூன்றில் இரண்டுக்கு நிகரான மாதாந்த ஊதியம் மற்றும் கொடுப்பனவுகள்.

ஒவ்வாமை ஏற்படும் போது சிங்கள மொழி சொற்கள் அமுலில் இருத்தல் வேண்டும்.

*3*. இந்நியதிச் சட்டத்தின் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளுக்கிடையில் ஏதேனும் ஒவ்வாமை காணப்பட்டால் சிங்கள மொழி அமுலில் இருக்க வேண்டும்.

*06- 440*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.